**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**

## SC.No.56/2025 – PW- 9

| | |
|---|---|
| Name | திருமதி. உமா மகேஷ்வரி |
| Husband/Father Name | ஸ்ரீதர் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | அரசு மருத்துவர் |
| Age | 38 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 12.11.2025.

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரக்கோணம் அரசு மருத்துவமனையில் முதுநிலை அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 17.05.2017 அன்று முழு நேர பணியில் இருந்த போது இலட்சுமணன், வயது 18, த/பெ. பாளையம், என்பவர் சிகிச்சைக்காக மருத்துவனைக்கு இராகவேந்திரன் என்பவரால் அழைத்து வரப்பட்டார்.

அவரை விசாரித்ததில் தன்னை அடையாளம் தெரியாத நபர்கள் கத்தியால் பருத்திபுத்தூர் கொல்லாபுரியம்மன் கோயில் அருகில் இரவு 09.45 மணிக்கு தாக்கியதாக தெரிவித்தார். காயத்தினை விபத்து பதிவேடு எண். 1527–ல் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு **அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அவரை பரிசோதித்த போது கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. ஆழமான வெட்டு காயம் அளவு 1 x 1 x 2 செ.மீ இடது முதுகு எலும்பிற்கு கீழே காணப்பட்டது. இரத்த கசிவு இருந்தது.

நான் காயம் பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து பின்னர்

மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். பின்னர் இராஜிவ் காந்தி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வரலாற்று சீட்டுடன் காயம் அடைந்த இலட்சுமணனை ஆஜர் செய்ய மேற்படி இலட்சுமணனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

மேற்படி மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்த நபர் அன்றைய தினம் குடிபோதையில் இருந்தார் என்று சொன்னால் சரிதான். எத்தனை பேர் காயம் பட்ட நபரை அடித்ததாக அவருக்கு தெரியவில்லை என்று கூறினார். காயம் பட்ட நபருக்கு முதுகு எலும்புக்கு கீழே காயம் ஏற்பட்டதாக தான் போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

வழக்கு சொத்தை என்னிடம் காண்பித்து வாக்குமூலம் ஏதாவது பெற்றார்களா என்றால் இல்லை. மது போதையில் உள்ள ஒரு நபர் பந்தல் போடும் கம்பியில் தடுத்து தடுமாறி விழும் போது மேற்கண்ட காயம் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் அந்த பகுதி கூர்மையாக இருந்தால் தான் அவ்வாறு காயம் ஏற்பட வாய்ப்புண்டு. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை மருத்துவமனையில் தான் வந்து விசாரித்தார்கள் ஆனால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.12 15:51:16 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.